ந.க.எண்.கே6/12195/2020

மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும்
பழங்குடியினர் நல அலுவலகம்,
வேலூர்.
நாள்: 20.01.2021.

## <u>சுற்றறிக்கை</u>

அய்யா/அம்மையீர்,

பொருள்: ஆதிதிராவிடர் நலம் - போஸ்ட் மெட்ரிக் மற்றும் பிரீ மெட்ரிக் கல்வி உதவித்தொகைத் திட்டம் - 2020-2021 ஆம் கல்வியாண்டு முதல் கல்வி உதவித்தொகை திட்டத்தில் பல்வேறு மாற்றங்கள் செய்யவிருப்பது - பள்ளிகள் / கல்லூரிகள் தயார் நிலையில் இருக்கக் கோருதல் - தொடர்பாக.

பார்வை:
1. மத்திய அரசு சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை ந.க.எண்.14011/04/2019-SCD-V, நாள்:23.12.2020.
2. சென்னை ஆதிதிராவிடர் நல ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்.எல்2/33011/2020-1, நாள்:30.12.2020.

*****

வேலூர் மாவட்டத்தில் போஸ்ட் மெட்ரிக் மற்றும் பிரீ மெட்ரிக் கல்வி கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ் அரசு / அரசு உதவி பெறும் மற்றும் சுயநிதி பள்ளிகள் / கல்லூரிகளில் பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிடர் இன மாணாக்கர்களின் கல்வி உதவித்தொகை விண்ணப்பங்களை 2011-12-ஆம் ஆண்டு முதல் இணைய வழியில் பெற்று கல்வி உதவித்தெகை வழங்கப்பட்டு வருகிறது.

போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டத்தில் பல்வேறு மாற்றங்களுடன் 2020-2021-ஆம் கல்வியாண்டு முதல் 2025-2026 ஆம் கல்வியாண்டு வரை திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்திட மத்திய அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது என்பதால் 2020-2021-ஆம் கல்வியாண்டிற்கான புதுப்பித்தல் / புதிய விண்ணப்பங்களுக்கு தேவையான மொத்த கல்வி உதவித்தொகையினை மத்திய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறைக்கு 31.01.2020-க்குள் அனுப்ப வேண்டும் என கால நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாக பார்வை 1-ல் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசால் கொண்டு வரப்பெற்ற மாற்றங்களை ஏற்று போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டத்தை தொடர்வது குறித்து மாநில அரசின் கொள்கை முடிவு வரப்பெற்றவுடன் மாற்றங்களுடன் இத்திட்டத்தினை 2020-2021 ஆம் கல்வியாண்டு முதல் புதிய / புதுப்பித்தல் விண்ணப்பங்களை இணையதளம் மூலம் பெற தேவையான குறிப்புரைகள் மற்றும்

Scanned with CamScanner

வழிகாட்டுதல்கள் வழங்கப்படும் எனவும், நிர்ணயம் செய்யப்படும் காலக்கெடுவிற்குள் மட்டுமே மாணாக்கர்களின் விவரங்கள் இணைய வழியில் பெறப்படும் என்பதால் முதற்கட்ட நடவடிக்கைக்காக பள்ளி தலைமையாசிரியர்கள் மற்றும் கல்லூரி முதல்வர்கள் பின்வரும் ஆவணங்களை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும் என ஆதிதிராவிடர் நலத்துறை ஆணையரால் பார்வை 2-ல் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**I.** மாணாக்கர்கள் (9 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு) / கல்லூரி மாணாக்கர்கள் தயார் நிலையில் வைக்கப்பட வேண்டியவை.

1. மாணவரின் ஆதார் அட்டை.
2. மாணவரின் / பெற்றோரின் கைபேசி எண்ணிற்கு கடவுச்சொல் (OTP One Time Password) வரப்பெறும் என்பதால் மாணவரின் / பெற்றோரின் கைபேசி எண் செயல்பாட்டில் உள்ளதை உறுதி செய்ய வேண்டும்.
3. மாணவரின் ஆதார் எண் உடன் இணைக்கப்பெற்ற வங்கிக் கணக்கு விவரம்.
4. மாணவரின் வங்கிக் கணக்கிற்கு மின்னனு தீர்வை மூலமாக கல்வி உதவித்தொகையினை வரவு வைக்க ஏதுவாக வங்கிக் கணக்கில் கல்வி உதவித்தொகை விண்ணப்பிக்கும் முன்னர் வங்கிக் கணக்கில் குறைந்தபட்சம் ஒரு முறையாவது பணப்பரிவர்த்தனை மேற்கொண்டு செயல்பாட்டில் வைத்திருக்க வேண்டும். **(Operative Account).**
5. வட்டாட்சியரால் வழங்கப்படும் மாணவரது சாதிச்சான்று / குடும்ப ஆண்டு வருமான சான்று.
6. துறையால் வழங்கப்பட்ட கல்வி உதவித்தொகை விண்ணப்பத்தில் உள்ள அனைத்து விவரங்களையும் பூர்த்தி செய்து உரிய ஆவணங்களுடன் பள்ளிகள் / கல்லூரிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**II.** பள்ளிகள் (9 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு) நிலையில் தயார் நிலையில் வைக்கப்பட வேண்டியவை.

1. மாணவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட கல்வி உதவித்தொகை விண்ணப்பங்களில் அனைத்து விவரங்களும் பூர்த்தி செய்யப்பட்டு உரிய ஆவணங்களுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதா என்பதனை உறுதி செய்யப்பட வேண்டும்.
2. மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டுத்துறையால் தங்கள் பள்ளிகளுக்கு வழங்கப்பட்டுள்ள **AISHE** (All India Survey Higer Education) and **DISE** Code (Unified District Information System for Education) பெறப்பட்டு இருக்க வேண்டும் மற்றும் ஏற்கனவே பெற்று இருந்திருந்தால் பயன்பாட்டில் உள்ளதா என்பதை உறுதிபடுத்திக் கொள்ள வேண்டும். AISHE and DISE Code பெறப்படவில்லை எனில் AISHE இணையதள முகவரி (**http://aishe.gov.in**) மூலமாக புதிதாக விண்ணப்பிக்க வேண்டும்.

Scanned with CamScanner

3. ஒவ்வொரு பள்ளிகளும் தத்தமது பள்ளிகளில் பயிலும் ஆதிதிராவிட மாணாக்கர்கள் கல்வி உதவித்தொகை இணையதளத்தில் நேரடியாக விண்ணப்பிப்பது குறித்து உதவி செய்யும் பொருட்டு **SC/ST Scholarship Help Desk** ஒன்றை அமைத்து, அதற்கு சமூக பொறுப்பும், கணிணி அறிவு நன்கு தெரிந்த தகுதியான அலுவலர்களை (ஆதிதிராவிடர் சமூகத்தை சேர்ந்தவராக இருப்பின் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்) நியமித்தும் அவ்வலுவலருக்கு உதவியாளர் ஒருவரும் நியமித்தும், அவ்வலுவலர்கள் தொடர்பான விவரங்களை மாணாக்கர்கள் அனைவரும் அறியும் வண்ணம் பள்ளிகளின் தகவல் பலகையில் ஒட்டப்பட வேண்டும். அவ்வலுவலர்கள் மாணாக்கர்களது கல்வி உதவித்தொகை விண்ணப்பங்களை இணைதளத்தில் தவறின்றி பதவிட (Error Free) அறிவுறுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

4. பள்ளிகள் நடத்துவதற்கான தற்போதைய அங்கீகாரச் சான்று மற்றும் அரசாணை.

## III. கல்லூரிகள் நிலையில் தயார் நிலையில் வைக்கப்பட வேண்டியவை:-

1. மாணவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட கல்வி உதவித்தொகை விண்ணப்பங்களில் அனைத்து விவரங்களும் பூர்த்தி செய்யப்பட்டு உரிய ஆவணங்களுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதா என்பதனை உறுதி செய்யப்பட வேண்டும்.

2. மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டுத்துறையால் தங்கள் பள்ளிகளுக்கு வழங்கப்பட்டுள்ள **AISHE** (All India Survey Higer Education) and **DISE** Code (Unified District Information System for Education) பெறப்பட்டு இருக்க வேண்டும் மற்றும் ஏற்கனவே பெற்று இருந்திருந்தால் பயன்பாட்டில் உள்ளதா என்பதை உறுதிபடுத்திக் கொள்ள வேண்டும். AISHE and DISE Code பெறப்படவில்லை எனில் AISHE இணையதள முகவரி (**https://aishe.gov.in**) மூலமாக புதிதாக விண்ணப்பிக்க வேண்டும்.

3. ஒவ்வொரு கல்லூரிகளும் தத்தமது கல்லூரிகளில் பயிலும் ஆதிதிராவிட மாணாக்கர்கள் கல்வி உதவித்தொகை இணையதளத்தில் நேரடியாக விண்ணப்பிப்பது குறித்து உதவி செய்யும் பொருட்டு **SC/ST Scholarship Help Desk** ஒன்றை அமைத்து, அதற்கு சமூக பொறுப்பும், கணிணி அறிவு நன்கு தெரிந்த தகுதியான அலுவலர்களை (ஆதிதிராவிடர் சமூகத்தை சேர்ந்தவராக இருப்பின் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்) நியமித்தும் அவ்வலுவலருக்கு கணிணி உதவியாளர் ஒருவரும் நியமித்தும், அவ்வலுவலர்கள் தொடர்பான விவரங்களை மாணாக்கர்கள் அனைவரும் அறியும் வண்ணம் கல்லூரிகளின் தகவல் பலகையில் ஒட்டப்பட வேண்டும்.

4. கல்லூரி நடத்துவதற்கான தற்போதைய அங்கீகாரச்சான்று மற்றும் அரசாணை.

5. கல்லூரிகளில் நடத்தப்படும் பாடப்பிரிவுகளுக்கு **NBA** (National Board of Accreditation) / **NAAC** (National Assessment and Accreditation Council) வழங்கப்பட்ட தரச்சான்றுக்கான ஆவணங்கள்.

Scanned with CamScanner

6. கல்லூரிகளில் நடத்தப்படும் பாடப்பிரிவுகளுக்கு தரச்சான்று பெறப்படவில்லை எனில் தரச்சான்று பெறுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

7. கல்லூரிகளில் நடத்தப்படும் பாடப்பிரிவுகளுக்கு பல்கலைக் கழகத்திற்கான இணைவிப்பு (**Affiliation Order**) சான்று.

எனவே, 2020-2021 ஆம் கல்வியாண்டு முதல் புதுப்பித்தல் / புதிய விண்ணப்பங்களை இணையதளம் மூலம் குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் விண்ணப்பிக்க இதன் முக்கியத்துவத்தையும், காலக்கெடுவையும் கருத்தில் கொண்டு மேற்காணும் நடைமுறையினை பின்பற்றியும் தக்க முன்னேற்பாடுகள் செய்து தயார் நிலையில் வைத்திருக்குமாறு பள்ளித் தலைமையாசிரியர்கள் மற்றும் கல்லூரி முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஒம்/- திரு.அ.சண்முக சுந்தரம், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சியர்,
வேலூர்.

பெறுநர்:-

1. முதல்வர்,
அனைத்து கல்லூரிகள்,
வேலூர் / இராணிப்பேட்டை / திருப்பத்தூர்.

2. தலைமையாசிரியர்
அனைத்து பள்ளிகள்,
வேலூர் / இராணிப்பேட்டை / திருப்பத்தூர்.

3. துணை இயக்குநர், கல்லூரி கல்வி இயக்ககம்,
வேலூர்.

நகல்:-

1. ஆணையர்,
ஆதிதிராவிடர் நலத்துறை,
சேப்பாக்கம்,
சென்னை-05.
} தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

2. மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும்
பழங்குடியினர் நல அலுவலர்,
இராணிப்பேட்டை / திருப்பத்தூர்.

3. முதன்மை கல்வி அலுவலர்,
வேலூர் / இராணிப்பேட்டை / திருப்பத்தூர்.

4. மாவட்ட கல்வி அலுவலர்கள்,
வேலூர்/இராணிப்பேட்டை/திருப்பத்தூர்/
வாணியம்பாடி/அரக்கோணம்
} மேல்நடவடிக்காக அனுப்பப்படுகிறது

/ஆணைப்படி/

20/1/2024
மாவட்ட ஆட்சித்தலைவருக்காக

Scanned with CamScanner